| வகுப்பு / பாடம் | 10 ம் வகுப்பு அறிவியல் -<br>வேதி வினையின் வகைகள் | அலகு | 10 |
|---|---|---|---|
| வினா வகை | சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. | மதிப்பெண் | 10 |

## வேதி வினையின் வகைகள்

I சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. $H_{2(g)} + Cl_{2(g)} \rightarrow 2HCl_{(g)}$ என்பது

அ) சிதைவுறுதல் வினை ஆ) சேர்க்கை வினை

இ) ஒற்றை இடப்பெயர்ச்சி வினை ஈ) இரட்டை இடப்பெயர்ச்சி வினை

2. ஒளிசிதைவு என்பது இதனால் நடைபெறும் சிதைவு வினையாகும்

அ) வெப்பம் ஆ) மின்னாற்றல் இ) ஒளி ஈ) எந்திர ஆற்றல்

3. கார்பன் மற்றும் ஆக்சிஜன் இடையேயான ஒரு வினை பின்வருமாறு குறிக்கப்படுகிறது.

$C_{(S)} + O_{2(g)} \rightarrow CO_{2(g)}$ இது எவ்வகை வினையாக வகைப்படுத்தப்படுகிறது.

(i) சேர்க்கை வினை (ii) எரிதல் வினை

(iii) சிதைவுறதல் வினை (iv) மீளா வினை

அ) (i) மற்றும் (ii) ஆ) (i) மற்றும் (iv)

இ) (i), (ii) மற்றும் (iii) ஈ) (i), (ii) மற்றும் (iv)

4. $Na_2SO_{4(aq)} + BaCl_{2(aq)} \rightarrow BaSO_{4(aq)}\downarrow + 2NaCl_{(aq)}$ என்ற வேதிசமன்பாடு பின்வருன்வற்றுள் எவ்வகை வினையைக் குறிக்கிறது.

அ) நடுநிலையாக்கல் வினை ஆ) எரிதல் வினை

இ) வீழ்படிவாக்கல் வினை ஈ) ஒற்றை இடப்பெயர்ச்சி வினை

5. வேதிச்சமநிலை பற்றிய பின்வரும் கூற்றுகளில் எவை சரியானவை ?

(i) இயக்கத்தன்மை உடையது

(ii) சமநிலை முன்னோக்கு மற்றும் பினனோக்கு வினைகளில் வினைவேகம் சமம்.

(iii) மீளா வினைகள் வேதிச்சமநிலையை அடைவதில்லை

(iv) வினைபடுபொருள் மற்றும் வினைவிளை பொருள்களில் செறிவு வேறுபடலாம்

அ) (i), (ii) மற்றும் (iii) ஆ) (i), (ii) மற்றும் (iv)

இ) (ii), (iii) மற்றும் (iv) ஈ) (i), (iii) மற்றும் (iv)

6. $X_{(s)} + 2HCl_{(aq)} \rightarrow XCl_{2(aq)} + H_{2(g)}$ என்ற ஒற்றை இடப்பெயர்ச்சி வினையில் X என்பது பின்வருவனவற்றுள் எதைக் குறிக்கிறது.

(i) Zn (ii) Ag (iii) Cu (iv) Mg சரியான இணையைத் தேர்ந்தெடு.

அ) (i) மற்றும் (ii) ஆ) (ii) மற்றும் (iii) இ) (iii) மற்றும் (iv) ஈ) (i) மற்றும் (iv)

LIVEWORKSHEETS

7. பின்வருவனவற்றுள் எது " தனிமம் + தனிமம் → சேர்மம் " வகை அல்ல

அ) $C_{(s)} + O_{2(g)} \rightarrow CO_{2(g)}$

ஆ) $2K_{(s)} + Br_{2(l)} \rightarrow 2KBr_{(s)}$

இ) $2CO_{(g)} + O_{2(g)} \rightarrow 2CO2_{(g)}$

ஈ) $4Fe_{(s)} + 3O_{2(g)} \rightarrow 2Fe_2O_{3(s)}$

8. பின்வருனவற்றுள் எது வீழ்படிவாதல் வினையை குறிக்கிறது.

அ) $A_{(S)} + B_{(S)} \rightarrow C_{(S)} + D_{(S)}$

ஆ) $A_{(S)} + B_{(aq)} \rightarrow C_{(aq)} + D_{(1)}$

இ) $A_{(aq)} + B_{(aq)} \rightarrow C_{(S)} + D_{(aq)}$

ஈ) $A_{(aq)} + B_{(S)} \rightarrow C_{(aq)} + D_{(1)}$

9. ஒரு கரைசலின் pH மதிப்பு 3 எனில் , அதன் $(OH^-)$ ஹைட்ராக்சைடு அயனி செறிவு என்ன?

அ) $1 \times 10^{-3}$ M ஆ) 3 M இ) $1 \times 10^{-11}$ M ஈ) 11 M

10. தூளாக்கப்பட்ட $CaCO_3$ : கட்டியான $CaCO_3$ விட தீவிரமான வினைபுரிகிறது. காரணம்

அ) அதிக புறப்பரப்பளவு ஆ) அதிக அழுத்தம்

இ) அதிக செறிவினால் ஈ) அதிக வெப்பநிலை

ஆக்கம் செ. பழனியப்பன் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் . அரசு உயர்நிலைப் பள்ளி, கொடியாலம்

LIVEWORKSHEETS